

# மௌனப் பிள்ளையார்

சாவி

மங்கள நூலகம்



# மௌனப் பிள்ளையார்

அப்பாசாமி வெகு காலமாகக் காட்டிலேயே வசித்து வந்தான். பிரம்மாண்டமான அந்த வனத்தில் கரடுமுரடான வண்டிப்பாதை ஒன்று வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தது. பாதைக்கு இருபுறங்களிலும் அடர்ந்து வளர்ந்த காட்டு மல்லிகைச் செடிகளும் பல விதமான முட் செடிகளும் இருந்தன. அப்பாசாமியைவிட வயது சென்ற விருக்ஷங்களெல்லாம்கூட அங்கே இருந்தன. ஆகையால் அந்தக் காட்டில் சமைத்துச் சாப்பிடுவதற்கு விறகுப் பஞ்சமே கிடையாது.

ஆனால், சாப்பிடுவதற்குத்தான் ஒன்றுமில்லை! என்றாலும் அப்பாசாமி ஒரு சந்தோஷப் பிரகிருதி. ''நாளைக்கு என்ன செய்வது?'' என்ற கவலையே அவனுக்குக் கிடையாது. அவன் அந்தப் பாதைக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய அரச மரத்துக்கு அடியில் குடிசைபோட்டு வாசம் செய்து வந்தான். அந்த அரச மரம் அவன் பார்த்து வளர்ந்த மரம். ஆகையால் அவனுக்கு அதன்மேல் அத்தியந்த விசுவாசம் உண்டு. அந்த மரமும் அவனிடத்தில் ஓயாமல் இராப் பகலாய்ச் 'சல சல' வென்று பேசிக்கொண்டே யிருக்கும்.

அவனுடைய குழந்தை பானுமதிக்குப் பேசவே தெரியாது. குழந்தை பானுவிடம் அவன் அளவு கடந்த அன்பு வைத்திருந்தான். தாயற்ற அந்தக் குழந்தையைப் பார்த்த போதெல்லாம் அவனுடைய குழி விழுந்த கண்களில் ஜலம் ததும்பும். குடிசைக்குப் பின்புறத்தில் அப்பாசாமிக்குச் சொந்தமாக ஒரு வாழைத் தோட்டம் இருந்தது. வயிற்றுக்கு ஒன்றுமே கிட்டாத நாட்களில் அந்தத் தோட்டத்திலிருந்து பழுத்த பழங்களாகக் கொண்டு வந்து, பானுவுக்குக் கொடுத்துத் தானும் உண்பான். பானு வெள்ளாட்டுப் பாலையும் வாழைப்பழத்தையும் சாப்பிட்டு வளர்ந்து வந்தாள்.

ஒரு நாள் அவன் தன் குழந்தை பானுவைத் தூக்கித் தன் தோளில் வைத்துக்கொண்டு ஆறு மைலுக்கப்பாலுள்ள

இரண்டு ஜன்னல்கள். மாடியிலேயே குழாய். அந்த இடம் அவனுக்கு மிகவும் பிடித்தமாயிருந்தது. அத்துடன் அந்த வீட்டில் ஒரே ஒரு பாட்டி மட்டும்தான் குடியிருந்தாள். அவளிடம் அரைகுறையாகப் பேசும் ஒரு சின்னக் குழந்தை; அவ்வளவே தான்.

பாஸ்கரன், ''பாட்டி, இந்த அறையை நான் எடுத்துக் கொள்கிறேன்; வாடகையைச் சொல்லுங்கள்'' என்றான்.

''ரொம்ப அதிகமில்லை. உன்னைப் பார்த்தால் நல்ல பிள்ளைபோல் தோன்றுகிறது. 'எலெக்ட்ரிக்' விளக்கு இருக்கிறது. இரவு பூராவும் வேண்டுமானாலும் படிக்கலாம். எனக்கும் இந்த வீட்டில் மனுஷாள் சகாயமில்லை. என் பிள்ளைக்கு மிலிடரியில் வேலை. இதோ இந்தக் குழந்தை அவனுடையதுதான்; என் பேரன். இதன் தாயார் போன வருஷம் 'டைபாயிட்' ஜுரத்தில் இறந்து விட்டாள். நான் ஒண்டிக்காரியாக இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறேன். இதற்கு டாக்டர் ஆட்டுப்பால்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார். அதற்காக ஒரு வெள்ளாடு வாங்கி வளர்க்கிறேன். அதோ கீழே கட்டி வைத்திருக்கிறேன், பார்'' என்றாள் பாட்டி.

இந்தச் சமயத்தில் கீழே கட்டப்பட்டிருந்த வெள்ளாடு, ''மே......ஏ......ஏ'' என்று கத்தித் தான் இருப்பதைத் தெரிவித்துக்கொண்டது.

''பாட்டி! நான் உங்களை வாடகை என்ன என்று கேட்டேனே ஒழிய இதெல்லாம் கேட்கவில்லையே!'' என்றான் பாஸ்கரன்.

''அதுக்கில்லேடாப்பா; வாடகை ஆறு ரூபாய்தான்; கொடுத்துவிடு'' என்றாள் பாட்டி.

❊

பாஸ்கரன் மேற்படி வீட்டுக்குக் குடி வந்த ஒரு மாதத்திற்கெல்லாம் பரீக்ஷையும் நெருங்கிற்று. இராத்திரி பூராவும் மணிக்கணக்கில் கண் விழித்துப் படிக்க ஆரம்பித்தான். தினமும் 'டீ'க்காக மட்டும் நாலணாச் செலவழிந்தது. பாஸ்



# ஒண்டுக் குடித்தனம்

யாரோ ஒருவர் தெருக் கதவைப் பலமாகத் தட்டினார். எழுந்து போய்க் கதவைத் திறந்தேன். தடபுடலாய் ஓர் ஆசாமி உள்ளே நுழைந்து, என்னிடம் ரொம்ப நாளாகப் பழக்கப்பட்டவர்போல் என் அருகில் வந்து தட்சிணாமூர்த்தி இரண்டு விரலை மடித்துக் கொண்டிருக்கிறதே அந்த மாதிரி நின்றார்.

ஒரு சிமிட்டா பொடி கேட்கிறாரென்பது எனக்கு விளங்கிற்று.

"இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டமாய்க் கதவைத் தட்டிக்கொண்டு உள்ளே வந்தார்?" என்று கேட்கலாமா என்றுகூடப் பார்த்தேன். கொஞ்சம் நிதானித்து "தாங்கள் யார்? என்னிடம் பொடிபோடும் வழக்கம் கிடையாதே" என்றேன்.

"நான் பொடி ஏதும் கேட்கவில்லையே" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே தெருவிலிருந்த 'டு லெட்' போர்டைக் காட்டினார்.

நெற்றியில் மூன்று ரேகைச் சந்தனம், பஞ்சகச்சம், பட்டையான அங்கவஸ்திரம், எல்லாவற்றையும்விட ஏழெட்டு நீட்டிக்கொண்டு விளங்கும் உச்சிக்குடுமி இவ்வளவும் சேர்ந்து அவரைக் குடும்பஸ்தர் என்று முறையிட்டன.

வந்தவர், "'இந்த வீட்டுக்கு வாடகை என்னவோ?" கேட்டார்.

"வீடு பூராவும் வாடகைக்கு விடுவதில்லை. இதோ பாருங்கோ! இந்தச் சமையலறை, இந்தக் கூடம்; அதோ எதிர்த்தாப் போலிருக்கிறதே அந்த ரேழி அறை — அது வரைக்கும்தான் வாடகைக்கு விடப்படும். வாடகை பன்னிரண்டே முக்கால் ரூபாய் ஆகும். அதைத் தவிர வீடு கூட்டும் கூலி, தாம்புக் கயிறு வாங்க, துடைப்பம் வாங்க இதற்கெல்லாம் 'எக்ஸ்ட்ரா' செலவு. அதில் பாதி நீங்கள் கொடுக்க